முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.05.2023**, செவ்வாய்கிழமை

1. மக்களை காத்து ஞானவானாக
மாற்றிட தேற்றிட அவதரித்த
ஆக்கமுள ஆறுமுக ஞானியே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது விடை திங்கள்
குறைவிலா உபயதிகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் **02** ம் நாள், **16.05.2023**, செவ்வாய்கிழமை)
அறிவுரை ஆசிதனை இனிதே
ஆற்றல்பட கண்ணானந்தர் யானும்
3. யானும் ஞானவான்களாக மக்கள்
உருவெடுக்க வேண்டி உரைப்பேன்
ஞான தேசிகன் வழிகாட்டல்
ஞானபண்டிதனாரின் ஞானமாக இருக்க
4. இருக்கவே கலியுக மக்களும்
ஏழாம்படைவீடான பிரணவக்குடிலை
கருத்துடனே அனுகி வந்து
காக்கும் சடாட்சர தீட்சை
5. தீட்சை அரங்கன் கரம்பட
தெரிவிப்பேன் ஏற்று மக்கள்
மாட்சிமைபட வணங்கித் தொடர
மாதவமாக நித்ய பூசைகள்
6. பூசைகள் செபதப முறையாக
புகலுவேன் மக்கள் தொடர
தேசமெங்கும் ஞானபண்டிதனின்
தெய்வீகத் தொடர்பு கூடும்
7. கூடவே அரங்கன் பலமான
குறைவிலா தரும வழிகளை
நாடெங்கும் கொண்டுச் செல்ல
ஞானமுடன் பக்குவம் தருகின்ற

8. தருகின்ற நிலை உயர்ந்து
தான தரும வழிகளுமே
பேருலகில் சிறப்புச் சக்திகளாக
பெருகி மாற்றம் நடக்கும்

9. நடக்கும் அரங்கன் ஆசிபட
ஞானவான்கள் படை பெருக
இடரான கலித்துன்பங்கள்
எல்லாம் இவ்வுலகை விட்டகலும்

10. அகல அற்புதம் நடக்கும்
அகல அமைதி பாதுகாப்பு
மகான்கள் வெளிப்படும்படி
மாற்றம் உலகினில் நடக்கும்

11. நடக்கவே ஞான வாழ்வாக
ஞானிகள் சூழ்ந்த நல்
இடரில்லா ஞானசித்தர் காலமாக
எங்கும் மாற்றம் காணும் அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—